84

786



1-MAR 192
784

ஆண்டவன் துணை.

முதல் பாகம்

# அதி நூதனக்
# கதர் கீர்த்தனம்.

மங்கலம்

K. பக்கீர்ஹசன் முஹிய்யத்தீன் சாயபு

குமாரர்

நாவலன் K. P. அஹ்மது இபுராஹீம் சாயபு

அவர்களால் இயற்றப்பட்டு

திருப்பூர் தண்டபாணி பிரிண்டிங் ஹவுஸில்

பதிக்கப்பட்டது.

1923

விலை 0—1—0 அணா

MTK
N23
L80854

மங்கலம் மகா-ள-ள-ஸ்ரீ நற்தமிழ் நேத்திர நாவலர்

K. P. முஹம்மதலி சாய்பு அவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

---

எழுசீர்களில் நெடி லாசிரிய விருத்தம்.

---

பூவினர் புகளும் புண்ணியர் நிறைந்த
புனித மங்கலப்பதி வாளும்
பாவலன் அஹ்மதி புராஹீம் பாக்கியன்
பனுவல்களிசைப் பதிர் தீரன்
நாவலர் புகள நவினவெண் தமிளால்
நவின்றனன் கதருடைக்கீதம்
ஆவலாய் நோக்கி குறைபல நீக்கி
அரைந்தனனிக்கவி அலியே.

———o———

# கதர் கீர்த்தனம்.

(வெண்பா.)

பாசமே அகன்றொழிய பரிமீதிலங்கிடும் சு
தேச ராட்டிண கதரைச் சூடிடவே—நேசனென்று
விர்க்குதவி யீந்திடுவாய் விமலசாவண குகத்
தர்ப்பரனே நீ அருள்—தா

(1-வது.)

(சோம சேகரனருளும் என்ற மெட்டு)

கண்ணிகள்.

சுந்திர லாவண்ய கதர் ஆடை ஆடை — கை
சுதேசி நூலினலிணைத்த மாடை மாடை
இந்திரத்தோர்கள் வைராக்கிய வாடை வாடை — நாம்
இசைந்தணிந்திட்டா லொளியும் பீடை பீடை (சுந்)

பார்புகள் அலிசகோதரர் வாக்யம் வாக்யம் — தெய்வ
பாகமேபுகள் விநோத யோக்யம் யோக்யம்
சீரிதே என விரும்பும் பாக்யம் பாக்யம் — நிதம்
செல்வ மோங்குமேதனசி லாக்யம் லாக்யம் (சுந்)

மாமகாத்துமா மொழிந்த காக்ஷி காக்ஷி — இந்த
மானிலத்தினோர்க்கு ஜம்ப மாக்ஷி மாக்ஷி
தாமதமில்லா தணிவோம் சூக்ஷி சூக்ஷி — வக
தாகமே ஒளிக்கும் சுய ஆக்ஷி ஆக்ஷி (சுந்)

காதலுடனே கதரை நோக்கு நோக்கு — அகக்
கார சூரரின் பதரை போக்கு போக்கு
கீதனிபுராஹீம் தமிழ் வாக்கு வாக்கு — புவி
கீர்த்தியே விளங்குமின்ப ஷோக்கு ஷோக்கு (சுந்)

---

(வாசுலேன் கொஞ்சம் என்ற மெட்டு)

கண்ணிகள்.

தேசக்கதரினை நேசத்துடனெடுத் தாசையுடனணிவோம்
சுகிர் தவிசு
வாசத்துடன் கனிவோம் (தேச)

# கதர் கீர்த்தனம்.

பச்சை சிகப்புநல் விச்சித்ரமாகிய இச்சைப்படும் உடையே
புவியிலுள்ள
ஒச்சையரும் பீடையே (தேச)

காச்சிதரும்சுய ஆட்சிக்கினியகதர் சாச்சியென விரும்பே
பிறகினிவைச்
சூக்ஷித்தரும் கரும்பே (தேச)

சிராஜ மங்கலம் ஊராம் அஹிம்சை புராய் தமிள் கீதமே
பாரோர்க்கிது நன்
நேராம் நவநீதமே (தேச)

---

(மதீனமே மோராசய்யா என்ற மெட்டு.)

பல்லவி.

தாஜ காருண்ய தேசக்
கதருடையே தேசக்
கதருடையே (தாஜ)

(அனுபல்லவி.)

தேச சுயாச்சிக்
கிதுவே நம் சாச்சி (தாஜ)

(தோஹைரா.)

அன்னிய நாட்டாடை அறவே ஒளிக்க நம்
அன்பர் வாக்கியம்
நன்னீதியான கைராட்டிணத்தைச் சுற்றி
நலம்பெருவதே சிலாக்கியம்

(முடுகுச்சந்தம்.)

நயதுயிலெதுவென தினம்மனம் வெருப்போம்
ஜெய ஜெயமென பதரினைக் கருவருப்போம்
நலமே இபுராய் கீதம்
நாட்டினோர்க்கு நற்போதம் (தாஜ)

---

# கதர் கீர்த்தனம்.

(தர்தோஜி கர்கீ என்ற மெட்டு.)

(பல்லவி.)

காருண்யமான கதர் களிப்புடையே தேச (கா)

(அனுபல்லவி.)

பார்புண்ய மோக்ஷம்
பலமே கடாக்ஷம்
பாவித்திருகரந் தாவித்தரையிசை
கூவிப்பலருடன் சேவித்தணிந்திடும் (கா)

(தோஹைரா.)

பாரோர்கள்க்கே இனியபலனைக் கொடுக்குமிப்
பக்தர் வைராக்கிய ஆடை
பரமனகம் மெச்சித்தருள் புரிகுவானிந்த
பாக்ய விநோத மாடை

(முடுகுச்சந்தம்.)

பலமே நலமே பாக்கிய விநோதம்
பதிமதி தரும் இபுராய் தமிள்கீதம்
பக்திநம் முத்திவி ளைத்திட இக்கதர்
சக்திவ ருத்திடும் இத்தரை சத்திய (கா)

---

(துலங்கும் செம்பொன் என்ற மெட்டு.)

(பல்லவி.)

இலங்கும் நன்தேயத்தரை பற்றிய
இருளை ஒளிக்க வந்த
இனிய சுதேச உடையே இங்கிர்தமெங்கும்
தனியே ஜொலிக்கும் மாடையே (இலங்)

(அனுபல்லவி.)

இன்பந்தரும் மத ஜம்பத்குறையரும்
ரம்பம் வினையொளித்தம்பம் தருமிதே
இனிய சுதேச உடையே இங்கிர்தமெங்கும்
தனியே ஜொலிக்கும மாடையே (இலங்)

# கதர் கீர்த்தனம்.

(தோஹைரா.)

காருண்யக் கீர்த்தியே கலையாடை நேர்த்தியே
கருணையளித்திடு மித்தாலம்
பார்புண்ய மோங்கிட பண்பான இக்கதரை
பசுந்திதன அணிந்தால் சீலம்

(சரணம்.)

பரிந்தணிவாய் பரனேக விநோதம்
பதிநலம் பெரும்வித பாக்ய நற்போதம்
சரிந்திடரிடும் பதர் கதரின் பேதம்
சாற்றிடுதே இபுராய் தமிள் கீதம்
சங்கத்திடைக் குதவியே ஜாமந்துலங்க
பொங்குந்தனப் பதவியே (இலங்)

(டில்லிநகர் தனிலே என்ற மெட்டு.)

(கண்ணிகள்.)

உல்லாசமான கதர் ஊக்கத்தை யழிக்கும் கதர்
எல்லோர்களும் அணிந்து ஏர்க்கென ஜெயிக்கும் கதர்
நல்லாவியைத்தரும் நவீன கதர்
நாகரீகத்தை விளக்குமே இக்கதர் (உல்)

சிங்காரமா மகாத்துமா செப்பிய அரும்மொழியே
மங்காதிலங்கு தய்யா மானிடர்க்கு நேர்வழியே
சங்கையுடனே கதர் உடுத்திடுவோம்
பங்கம் ஒளிக்கப்பதர் விடுத்திடுவோம் (உல்)

இந்து முசல்மான்களுக்கு ஏற்ற நலமான உடை
பந்து இனத்தாரவர்க்கு பாக்கிய சிலாக்ய உடை
நன்தேயத்தோ ரகத்திர்க்கேற்ற உடை
நானிலம் போற்றும் நயமான உடை (உல்)

தேசவாசர் புகளும் தேர்ச்சையோ ரிணைத்த துயில்
கூசாமலே யணிய கூரியச்சுதேசத் துயில்
பாசமதனையகற்றும் பக்தர் துயில்
பாவலரினர்கள் மெச்சும் பாக்ய துயில் (உல்)

## கதர் கீர்த்தனம்.

மங்கலமா நகராம் மைந்தன் அஹ்ழதிபுராய்
பங்கம் அகன்றநல்மைதீன் பாக்ஷா தன்ஸ்னேகிதராம்
தங்கமெனலாம் சொரூப மன்மதனும்
திங்கள் ஜொலிக்கும் வதனனன்சுதனும் (உல்)

கதர் கீர்த்தனம் முற்றிற்று.

(எண்ணடி ஆசிரிய விருத்தம்.)

(வாழி.)

அண்டம்புகழ்தேச அபிமன்னரென்றுமே
அதிகீர்த்தி யோங்கி வாழி
தொண்டனிபுராய் தமிழ்துரித மிசைபொங்கியே
துணிகரம் மிதைத்து வாழி
பண்டனருமங்கலப் பதிவாழும் மானிடர்
பதி செழித்தோங்கி வாழி
தண்டபாணிப் பிரஸ் தரைமீதிலங்கியே
தானே நீடூழி வாழி.

முற்றிற்று,


| | |
|---|---|
| நூதனக் கதர் கீர்த்தனம் | 0—1—0 |
| ரஞ்சித கீதமஞ்சரி | 0—2—0 |
| தீன்வளிச் சிந்து | 0—4—0 |

ஷை புஸ்தகங்கள் எங்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


தண்டபாணி பிரிண்டிங் ஹவுஸ், திருப்பூர்.—1000 காபிகள்